சார்பு நீதிமன்றம், மேலூர்

*OS.No.500/2019*

| | |
|---|---|
| பெயர் | : அசாருதீன் |
| தகப்பனார் பெயர் | : சையது இப்ராகிம் |
| கணவர் பெயர் | : |
| வயது | :35 |
| கிராமம் | : சொக்கலிங்கபுரம் |
| வட்டம் | : |
| தொழில் | : காய்கறி வியாபாரம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

*13.07.2026*

பி.வா.சா. *1* முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு *1* வது சாட்சி ஆவேன். என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நான் தற்போது வழக்கு சொத்து தொடர்பான வீட்டு வரி ரசீதுகள் அசலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.*6* ஆக ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்து தொடர்பான *EB* பில்கள் அசல்.மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.*7* ஆக ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. என் தாயார் பாரிசா பேகத்தின் இந்தியன் வங்கி கணக்கு புத்தகம் ஒளிநகல் பி.வா.சா.ஆ.*8, 30.05.2019* தேதியிட்ட முபாரக் அலி, பவுனு ரோஜாவிற்கு எழுதி கொடுத்த தான செட்டில் மெண்ட் ஆவணத்தின் கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.*9*.

வாதி தரப்பு குறுக்குவிசாரணை

தற்போது நான் தாக்கல் செய்திருக்கும் வீட்டு வரி ரசிதுகள் ஏற்கனவே வா.சா.ஆ *5* ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் நான் தாக்கல் செய்திருக்கும் பி.வா.சா.ஆ.*9* ஆவணமானது ஏற்கனவே வாதி தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே வாதி தரப்பில் பாரிசா பேகத்திற்கு ரூ.*3* லட்சம் கட்டியத்திற்கான வங்கி செலுத்து சீட்டு வா.சா.ஆ.*16* ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே வாதி தரப்பில் வழக்கு சொத்து தொடர்பாக மின்சார கட்டண ரசீதுள் சாகுல் ஹமீது பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றால் அது ஹபிபுல்லா பேக் பெயரில் பிரிக்கப்பட்ட சொத்திற்கானது என்று சாட்சி கூறிவிட்டு மீண்டும் தாங்கள் தான் கட்டியதாக கூறுகிறார். ஹபிபுல்லா பேக்கும் என் தந்தையாரான சையது இப்ராகிம் ஒன்றாக வசித்து வந்ததற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் ஆவணம் இல்லை. ஹபிபுல்லா பேக் சொத்தில் உள்ள தெற்கு பகுதியில் உள்ள வீட்டில் வசித்து வந்தார் என்றும் நாங்கள் வடக்கு பகுதியில் உள்ள வீட்டில் வசிந்து வந்தோம் என்றால் நாங்கள் தனித்தனியாக வசித்து வந்தோம் என்பது உண்மை தான். எங்களுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கு சொத்தின் ஒரு பகுதி என் தந்தையின் சொத்து என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் அது பூர்வீக சொத்து ஆகும். வாதி தரப்பில் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பை நான் படித்து பார்த்தேன். அதில் வாய்க்காரால் பாகம் பிரிக்கபட்டதாக இருந்தது. வீடு பாகம் பிரிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் *36* செண்ட் புஞ்சை நிலத்தை பாகம் பிரிக்கவில்லை. மேற்படி புஞ்சை  நிலத்தை பாகம் பிரிக்கவில்லை. *3* பாகத்திற்கு பதிலாக *2* பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு பாகம் கொடுக்கவில்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றும் மேற்படி புஞ்சை நிலம் வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு வீடானது என்னுடைய தந்தையாருக்கம்

இறந்து ஹபிபுல்லா பேக்கிற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஹபிபுல்லா பேக் அவருடைய பாகத்தை உயில் மூலமாக வாதிகளுக்கு எழுதி கொடுத்தார் என்றும் இது தொடர்பாக வாதிகள் தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டும் எங்கள் தரப்பில் மறுப்பு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண்.*1062* என்பது சுமார் ஒரு ஆண்டுக்கு முன்பு என் தாயார் பெயரிலும் என் பெயரிலும் கூட்டு பட்டாவாக மாற்றியிருக்கிறேன். மேற்படி பட்டாவானது வழக்கிற்கு பின்னிட்டு மாற்றப்பட்டது என்றால் சரிதான். சாட்சியிடம் மேற்படி பட்டா காட்டப்பட்டு அதை சாட்சி ஒப்புகொள்ளவே மேற்படி பட்டா வா.சா.ஆ.*21* ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஹபிபுல்லா பேக்கை உதுமான் அலி என்பவர் மாடியில் இருந்து கீழே தள்ளிவிட்டதால் அந்த காயத்திற்காக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அதனால் இறந்தார் என்று என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை என்னுடைய எதிர் உரையிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ கூறவில்லை என்றால் சரிதான். விபத்தினால் ஹபிபுல்லா பேக் இறந்ததாகதான் என்னுடைய எதிர் வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் விபத்தில் இருந்து காயம்பட்டு தேறிவிட்டார். அதன்பின் கீழே தள்ளிதான் அவர் இறந்து போனார். எதிர் வழக்குரையில் *6* வது பத்தியில் அவருக்கு விபத்து ஏற்பட்டு அவர் இறந்துவிட்டதாக கூறப்பட்டுள்ளதே தவிர அவரை மாடியில் இருந்து கீழே தள்ளி இறந்தார் என்று கூறவில்லை என்றால் சரிதான். அவர் *14.04.2019* அன்று ஹபிபுல்லா பேக் இறந்துவிட்டார். அவரை மறுநாள் அவரது வீட்டிற்கு எடுத்து வந்தோம். மேற்படி விவரத்தை என் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் என்னுடைய எதிர் வழக்குரையிலும் கூறவில்லை என்றால் சரிதான். ஹபிபுல்லா பேக் விபத்துகுள்ளானது குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். சாட்சியிடம் மேற்படி முதல் தகவல் அறிக்கை காட்டப்பட்டு கேட்கப்பட்டது சாட்சி அதை பற்றி தனக்கு தெரியாது என்று குறிப்பிடுகிறார். விபத்து

நடந்தது உண்மைதான். இது தொடர்பாக குற்ற வழக்கு இருப்பது தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஹபிபுல்லா பேக் உடலானது உடற்கூறாய்வு செய்யப்பட்டு அதில் அவருக்கு வலது தொடையில் ஏற்பட்ட காயங்கள் காரணமாகவும் மேலும் அதில் சீல் பிடித்ததாகவும், தலையில் வீக்கம் மற்றும் நீர் கோர்த்து இருப்பதாகவும் கூறப்பட்டு, அவர் இறந்ததாக சான்றளிக்கபபட்டுள்ளது என்றால் சரியல்ல. மாடியில் கீழே விழுந்து இறந்ததாக நான் கூறுவது தவறு என்றும் அவர் விபத்தினால் தான் இறந்தார் என்றால் சரியல்ல. ஹபிபுல்லா பேக் உயில் மூலமாக வாதிகளுக்கு எப்பொழுது எழுதி கொடுத்தாரோ அப்போதிலிருந்து வாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.07.13 20:35:48 +0530

*Sub Judge,*
*Melur.*